CCE-II-RR/PR/PF/NSR/NSPR(A)/888/4056

**A**

## ಜೂನ್ 2024 ರ ಪರೀಕ್ಷೆ - 2

## JUNE 2024 EXAMINATION - 2

ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 12 ]
Total No. of Printed Pages : 12 ]

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 38 ]
Total No. of Questions : 38 ]

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 85-T**
**Code No. : 85-T**

**CCE RR/PR/PF/ NSR/NSPR**
**FULL SYLLABUS**

Question Paper Serial No.

## ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ

## Subject : SOCIAL SCIENCE (சமூக அறிவியல்)

**(ತಮಿಳು ಮಾಧ್ಯಮ / Tamil Medium)**

**(ಶಾಲಾ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಖಾಸಗಿ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / என்.எஸ்.ஆர். / என்.எஸ்.பி.ஆர்.)**

**(Regular Repeater / Private Repeater / Private Fresh / NSR / NSPR)**

ದಿನಾಂಕ : 22. 06. 2024 ] [ Date : 22. 06. 2024
ಸಮಯ : ಬೆಳಗ್ಗೆ 10-15 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 1-30 ರವರೆಗೆ ] [ Time : 10-15 A.M. to 1-30 P.M.
ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 80 ] [ Max. Marks : 80

**பொதுவான குறிப்புகள் :**

**Cut here/ಇಲ್ಲಿ ಕತ್ತರಿಸಿ**

1. இந்த வினாத்தாள் வினாக்கள் 38-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது ( Sealed by reverse jacket ) நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும் பொழுது **வலக்கைப் பக்க ஓரத்தை பிரித்து திறக்க வேண்டும் (அம்புகுறியிட்டு காட்டியுள்ளபடி). இடது பக்க ஓரத்தை பிரிக்கக்கூடாது**. வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும் பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
4. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணவர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.
6. மாணவர்கள் தங்கள் தேர்வு அனுமதிச்சீட்டில் ( Admission Ticket ) உள்ள குறியீடும், வினாத்தாளின் குறியீடும் ஒரே மாதிரியாக உள்ளதா என்பதை சரிபார்க்கவும்.

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**22. 06. 2024**

**Tear here**

**I. பின்வரும் வினாக்கள்/மற்றும் முழுமைப்பெறாத கூற்றுகளுக்கு *நான்கு* மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும் :**

**8 × 1 = 8**

1. நிரந்தர ஜமீன்தாரி முறையை அமல்படுத்தியவர்

   (A) வாரன் ஹேஸ்டிங்ஸ்

   (B) கார்ன்வாலிஸ்

   (C) வெல்லஸ்லி

   (D) டல்வௌசி

2. இரண்டாம் ஆங்கிலோ-மைசூர் போருக்கான முக்கிய காரணம்

   (A) ஆங்கிலேயர்கள் மாஹேவை கைப்பற்றினர்

   (B) ஆங்கிலேயர்கள் ஸ்ரீரங்கப்பட்டின ஒப்பந்ததின் நிபந்தனைகளை மீறினர்

   (C) ஆங்கிலேயர்கள் கார்வர் மற்றும் கோயம்புத்தூரையும் கைப்பற்றினர்

   (D) ஆங்கிலேயர்கள் மங்களூர் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை மீறினர்

3. உலக சுகாதார அமைப்பின் தலைமையகம் இங்கு அமைந்துள்ளது

(A) நியூயார்க்

(B) பாரிஸ்

(C) ரோம்

(D) ஜெனிவா

4. இந்தியாவின் தேயிலை துறைமுகம்

(A) விசாகப்பட்டணம்

(B) மர்மகோவா

(C) கொல்கத்தா

(D) மும்பை

5. அரசியலைமப்பின் 17வது சட்டபிரிவின் முக்கியத்துவம்

(A) குழந்தை தொழிலாளர் தடைச்சட்டம்

(B) தீண்டாமை ஒழிப்பு

(C) எழுத்தறிவின்மை ஒழிப்பு

(D) வரதட்சணை தடைச்சட்டம்

6. நர்மதையை காத்திடும் இயக்கத்தின் தலைவர்கள்

(A) பாபா அம்டே மற்றும் மேத்தா பட்கர்

(B) சுந்தர்லால் பகுகுணா மற்றும் சந்திரபிரசாத் பட்

(C) டாக்டர் சிவராம்காரந்த் மற்றும் குசுமா சொரபா

(D) கர்வே மற்றும் ஷ்யாமாஜீ கிருஷ்ணவர்மா

7. இந்தியாவின் பசுமைப்புரட்சியின் தந்தை

(A) வர்கீஸ் குரியன்

(B) டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன்

(C) அமர்த்தியாசென்

(D) டாக்டர் நார்மன் போர்லாக்

8. ரமேஷிற்கு ஐந்து வயது நிரம்பிய மகள் இருக்கிறார். எதிர்காலத்தில் மகளின் திருமணத்திற்காக பணத்தை சேமிக்க தீர்மானித்தார். இதற்கு சிறந்த பொருத்தமான வங்கி கணக்கு

(A) சேமிப்புக்கணக்கு

(B) நடப்புக் கணக்கு

(C) தொடர்வைப்புக் கணக்கு

(D) கால வைப்புக் கணக்கு.

**II.** **பின்வரும் வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளிக்கவும் :**

**8 × 1 = 8**

9. சத்யார்த்த பிரகாஷ் என்ற நூலை எழுதியவர் யார் ?

10. இல்பர்ட் மசோதாவின் முக்கிய நோக்கம் என்ன ?

11. சமுதாய படிநிலை முறைகள் எவ்வாறு உருவாகிறது ?

12. படைகுறைப்பு என்றால் என்ன ?

13. பெட்ரோலியத்தை ‘‘திரவ தங்கம்’’ என்று ஏன் அழைக்கிறார்கள் ?

14. மழைநீர் சேகரிப்பு ஏன் அவசியம் ?

15. ‘‘அதிகாரம் பகிர்ந்தளித்தல்’’ என்றால் என்ன ?

16. மாவட்ட தொழில் மையங்கள் ஏன் நிறுவப்பட்டன ?

**III. <u>பின்வரும் வினாக்களுக்கு இரண்டிலிருந்து நான்கு வாக்கியங்கள் வரை விடையளிக்கவும் :</u>** **8 × 2 = 16**

17. பொதுநல நாடுகள் ஏன் நிறுவப்பட்டது ?

**அல்லது**

லாபம் ஈட்டுதலை எப்படி தடுக்கலாம் ?

18. ''அப்பிகோ இயக்கத்தை'' விளக்கவும்.

**அல்லது**

குழந்தை திருமணத்தால் ஏற்படும் தீமைகளை விளக்குக.

19. முதல் உலகப்போரின் விளைவுகள் யாவை ?

20. ஜூனாகத் இந்திய யூனியனுடன் எவ்வாறு இணைக்கப்பட்டது ?

21. சமீப காலமாக மண் அரிப்பு அதிகரித்து வருகிறது. ஏன் ?

22. இந்திய வேளாண்மை பருவ மழையுடனான சூதாட்டம் நியாயப்படுத்து.

23. பொது நிதி என்பது தனிப்பட்ட நிதியிலிருந்து வேறுபட்டது. எப்படி ?

24. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 15-ம் தேதி உலக நுகர்வோர் தினமாக கொண்டாடப்படுகிறது. ஏன் ?

**IV. பின்வரும் வினாக்களுக்கு ஆறு வாக்கியங்களில் விடையளிக்கவும் :**
**9 × 3 = 27**

25. நான்காம் கிருஷ்ணராஜ உடையாரின் ஆட்சி மைசூரை ஒரு முன்மாதிரி மாநிலமாக உருவாக்கினார். நியாயப்படுத்து.

**அல்லது**

இந்திய சமுதாய சீர்திருத்தத்தில் ராஜாராம் மோகன்ராயின் பங்கு மறக்க இயலாதது. நியாயப்படுத்துக.

26. நிலத்தின் பயன்பாட்டை பாதிக்கும் காரணங்களை பட்டியலிடுக.

**அல்லது**

இந்தியாவின் தொழில்துறை மண்டலங்களை பட்டியலிடுக.

27. கிராமப்புற வளர்ச்சியில் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆதாரப்படுத்துக.

**அல்லது**

இந்தியாவின் வளர்ச்சியில் ஐந்தாண்டு திட்டங்கள் முக்கியப் பங்காற்றியுள்ளன எப்படி ?

28. வங்கியின் செயல்பாடுகள் யாவை ?

**அல்லது**

ஒரு தொழில் முனைவோரின் செயல்பாடுகள் யாவை ?

29. துணை படைக் கூட்டணியின் நிபந்தனைகள் யாவை ?

30. பிளாசி போரின் காரணங்களையும் விளைவுகளையும் விளக்கவும்.

31. ரஷ்யா பல சூழ்நிலைகளில் இந்தியாவிற்கு ஆதரவாக உள்ளது. எப்படி ?

32. வேலையில்லாத் திண்டாட்டத்திற்கான தீர்வுகள் என்ன ?

33. காடுகளைப் பாதுகாக்கும் முறைகளை விளக்கவும்.

**V. பின்வரும் வினாக்களுக்கு எட்டு வாக்கியங்களில் விடையளிக்கவும் :**

**4 × 4 = 16**

34. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தீவிரவாதிகளின் பங்களிப்பை விளக்கவும்.

*அல்லது*

இந்தியாவில் ஆங்கிலேய கல்வி முறையின் விளைவுகளை விளக்கவும்.

35. முதல் இந்திய சுதந்திரப் போர் பல்வேறு காரணங்களினால் தோல்வியடைந்தது. நியாயப்படுத்தவும்.

36. பெண்களின் நிலையை மேம்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

37. நிலநடுக்கத்திற்கான காரணங்களையும் அதன் விளைவுகளையும் குறிப்பிடவும்.

**VI.** 38. <u>இந்திய தரைப் ( **Outline** ) படத்தை வரைந்து கீழ்க்காண்பவற்றைக் குறிக்கவும்.</u> **1 + 4 = 5**

a) $23\frac{1}{2}^{\circ}$ வடக்கு அட்சரேகை

b) கொங்கன் கடற்கரை

c) ஹிராகுட் திட்டம்

d) அமிர்தசரஸ்.

<u>*பார்வைத் திறன் அற்றோர்க்கான வினா :* **(வினா எண் 38 க்கான மாற்று வினா)**</u> **5**

பல்நோக்கு நதி பள்ளத்தாக்கு திட்டத்தின் முக்கிய நோக்கங்களை குறிப்பிடுக.

DO NOT WRITE ANYTHING HERE